பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 07 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கல்வி, திறன் மேம்பாடு, புதுமைக் கண்டுபிடிப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியா - ஆஸ்திரேலியா நாடுகள் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** வீட்டுவசதி தொடர்பான அனைத்து திட்டங்கையும் விரைந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

**3.** அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

**4.** கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கல்வி, திறன் மேம்பாடு, புதுமைக் கண்டுபிடிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா - ஆஸ்திரேலியா நாடுகள் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதில் விளையாட்டுத்துறை முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டமான தருணங்களில் பிற நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு காரணமாக இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை மேம்பாட்டு மையங்கள் உறுதுணையாக இருக்கும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உயர்நிலை ஆய்வுக் கூட்டத்தில், திறன்மேம்பாடு, பரிசோதனை, வடிவமைப்பு, தொழில்நுட்பம், தொழில்முனைவு மேம்பாடு, கடனுதவி, ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை ஜவுளித்துறைக்கு இந்த மையங்கள் வழங்கிடும் என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் தொழில்நுட்ப மேம்பாடு, சீர்திருத்த நடவடிக்கைகளின் செயல்பாடுகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

இந்திய ஜவுளித்துறையை நவீனப்படுத்தும் வகையில், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் அமலாக்கம் குறித்தும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

பயனாளர்களின் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் நவீன முறையில் மேம்படுத்தப்பட்டுள்ள புதிய இணையதளத்தின் செயல்பாட்டையும் திரு. கிரிராஜ் சிங் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

வீட்டுவசதி தொடர்பான அனைத்து திட்டங்கையும் விரைந்து நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மதுரை எல்லீஸ் நகரில் வீட்டு வசதி வாரிய வளாகத்தில் நவீன அடுக்குமாடி குடியிருப்புகள் அமைப்பதற்கான பணிகளை விரைவில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் மற்றும் வீட்டுமனைகள் உருவாக்கப்படும் என்று திரு. ராஜ்குமார் கூறினார்.

<<<<>>>>

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் மாநில அரசு

கவனம் செலுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், கடந்த சில நாட்களாக மதுரை, திருப்பூர், நீலகிரி, கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மாணவர் சேர்க்கை இல்லாத காரணத்தால் பல தொடக்கப் பள்ளிகள் மூடப்பட்டு வருவதாக வெளியாகும் செய்திகள் வருத்தமளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசு அங்கன்வாடி மையங்கள் மற்றும் தொடக்கப்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அரசு விளக்கமளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள், தரமான கல்வி ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட சிப்பாய் புரட்சியின் 220ஆம் ஆண்டு நினைவு தினம் வேலூரில் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தின் நினைவாக வேலூர் கோட்டை எதிரே தமிழக அரசால் அமைக்கப்பட்ட நினைவுத் தூணில் முன்னாள் ராணுவத்தினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் பெருமளவில் பங்கேற்று அஞ்சலி செலுத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Mohan — 28 Sec)**

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் பெய்துவரும் பருவமழை காரணமாக உதகை, கூடலூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் இதமான சூழல் நிலவி வருகிறது.

முதுமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வனப்பகுதிகளில் வன விலங்குகள் உணவிற்காக சாலைகளில் வலம் வருவதால் சுற்றுலாப் பயணிகள் உரிய முன்னெச்சரிக்கையுடன் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 34 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மாவட்டங்களில் ஒருசில பகுதிகளில், அடுத்த நான்கு தினங்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நேற்று மாலை பெய்த மழை காரணமாக, விமான நிலையத்தில் 20 விமான சேவைகள் பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பம் நிலவி வந்த நிலையில், திருத்தணி, ஆர் கே பட்டை, திருவாலங்காடு, திருவள்ளூர், ஆவடி போன்ற பகுதிகளில் நேற்று கன மழை பெய்து குளிர்ந்த சூழல் நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்கா நடத்திய தாக்குதலையடுத்து, பஹ்ரைன், குவைத், கத்தாரில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது.

------------

பயங்கரவாத ஆதரவு நாடு என்ற பட்டியலில் இருந்து சிரியாவை நீக்குவது என்ற முடிவை அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

------------

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் கணித்துள்ளது.

------------

செயற்கை கருத்தரிப்பு மருத்துவமனைகளில் விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுவது குறித்து ஆய்வு செய்வதற்காக உயர்நிலை நிபுணர் குழுவை தேசிய மகளிர் ஆணையம் அமைத்துள்ளது.

------------

விதிமுறைகளை முறையாக பின்பற்றாத மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

------------

உள்நாட்டு காலணி உற்பத்திக்கான சூழல் அமைப்பை வலுப்படுத்தும் வகையில், தரக் கட்டுப்பாட்டு விதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் கூறியுள்ளது.

------------

நாமக்கல் மாவட்டம், அரசு மருத்துவமனையில், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ், தாய்மார்களுக்கு நினைவு பரிசு பெட்டகத்தினை ஆட்சியர் திரு மதுபாலன் வழங்கினார்.

------------

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் குறித்த கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

------------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே வனத்துறையினர் மேற்கொண்ட சோதனையில், பதுக்கிவைக்கப்பட்டிருந்த இரண்டு யானை தந்தம் பறிமுதல் செய்யப்பட்டது.

------------

நீலகிரி மாவட்டம் பாட்டவயல் பகுதியில் கம்பி வேலியில் சிக்கியிருந்த சிறுத்தையை மீட்ட வனத்துறையினர் முதுமலை வனப்பகுதியில் பாதுகாப்பாக விடுவித்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

லண்டனில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

---------------

**23 வயதிற்குட்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.**

**சீனாவின் ordos-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு ஆயிரத்து 600 மீட்டர் தொடர் ஓட்டத்தில், இந்தியாவின் Astik Pradhan, Sandramol Sabu, Setu Mishra, Shravani Sangle அணி தங்கப் பதக்கம் வென்றது.**

**ஆடவர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில், Shivaji Parashuram வெள்ளிப் பதக்கமும், வினோத் சிங் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.**

**ஆடவர் வட்டு எரிதலில், இந்தியாவின் Bhartpreet Singh-கும், மகளிர் மூவாயிரம் மீட்டர் Steeplechase ஓட்டத்தில், இந்தியாவின் Prachi Devkar-ம், வெண்கலப் பதக்கம் வென்றனர்.**

------------

**ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா - பல்கேரியாவின் அலெக்ஸாண்டர் டான்ஸ்கி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.**

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-3**, **6-4** என்ற செட் கணக்கில் ருமேனியாவின் **Vlad Victor Cornea** - மால்டோவாவின் **Radu Albot** இணையை வென்றது.

**<<<<The End>>>>**